# ஒரு மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள்

*"இந்த உலகில் பணம் இருந்தால், வாழும் வரை மட்டுமே மதிப்பு.*

*ஆனால் நல்ல குணம் இருந்தால், இறந்த பின்பும் வாழலாம்"*

இப்பிரபஞ்சம் எத்தனையோ விடயங்களை உள்ளடக்கியது. அதில் பல நல்ல விடயங்களும் உள்ளன. பல தீய விடயங்களும் உள்ளன. இவ்வாறானவற்றில் மனிதன் தனது வாழ்க்கைக்கு எது முக்கியம் என ஆராய்ந்து எடுக்க வேண்டியது கட்டாயமானதாகும். அவ்வாறு அவன் தேர்ந்தெடுக்க வேண்டிய விடயங்களில் மிக முக்கியமானது தனது குணம். இந்த உலகில் பணம் தான் எல்லாம் என்று எண்ணி அதை நோக்கி ஓடுபவர்கள் பலர் உள்ளனர். ஆனால் அவர்கள் பணத்தை தேடும் எண்ணத்தில் தமது குணத்தை இழந்து விடுகின்றனர். குணம் இல்லாத இடத்தில் பணம் மாத்திரம் இருப்பதால் எந்த பயனும் இல்லை என்பதை அவர்கள் புரிந்துக் கொள்ள வெகுநாட்களாகி விடுகிறது.

ஆனால் அவர்கள் அனைத்தையும் புரிந்துக் கொண்டு திரும்பிப் பார்க்கும்போது அவர்களது உறவுகளோ, நண்பர்களோ அவர்களை விட்டு தொலைதூரம் சென்றிருப்பர். ஒரு மனிதன் தான் அடைய நினைக்கும் உச்சத்தை அவனது பணத்தை விட அவனது நற்குணங்கள் அடைய வைக்கும். இதுவே உலகில் இன்று வரை உள்ள நிதர்சனம். நற்குணங்கள் என்பவை யாவை? என விளக்கமாக நோக்கினால் ஒருவர் செய்த தவறை பெரிதுபடுத்தாது மன்னித்தல், நமக்கு ஏற்படுகின்ற அவமானங்கள் போன்றவற்றை பொறுமையாக தாங்கிக் கொள்ளல், தமது நண்பர்கள், உறவினர்களை சந்தேகப்படாமல் அவர்கள் மீது நம்பிக்கை வைத்தல், உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், ஏழைகளுக்கு உதவி செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவை யாவும் மட்டுமல்ல. இங்கு குறிப்பிடப்படாத இன்னும் எத்தனை நற்குணங்கள் ஒரு மனிதனை ஒரு கூட்டத்தின் மத்தியில் தனித்துவமாக காட்டக் கூடியவை என்பதை அறிந்துக் கொண்டு நாம் அதற்கமைவாக வாழப் பழகிக் கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். இனி இவ்வாறான நற்பண்புகளைப் பற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

மன்னிப்பு என்பது மிகவும் உன்னதமான ஒரு நற்குணமாகும். ஒருவன் தான் செய்த தவறை உணர்ந்து தன்னால் யாருக்குத் தவறிழைக்கப்பட்டதோ அவர்களிடம் சென்று தன்னை மன்னிக்கும்படி கேட்கிறான் என்றால் அவனால் பாதிக்கப்பட்டவர் அவனை மன்னித்து விடுகிறார் என வைப்போமே. அவர் பெருந்தன்மையோடு மன்னித்து விட்டார் என்பது மட்டும் இதற்கு காரணம் கிடையாது. இந்த உலகில் தவறு செய்தவனுக்கு எவ்வளவு பெரிய தண்டனை கொடுத்தாலும் ஏன்? உயிரையே எடுத்தாலும் இவை அனைத்தையும் விட மிகப் பெரிய தண்டனை அவனை மன்னிப்பது. மன்னிப்பை விட ஒரு பெரிய தண்டனை இந்த உலகில் கிடையாது. எது எவ்வாறாயினும் மன்னிப்பு வழங்கியவர் நற்குணம் கொண்டவரே.

அடுத்தது பொறுமை. ஒருவனிடம் காணப்படக்கூடிய பொறுமை அனைத்து நற்குணங்களிலும் மிகவும் உயர்ந்ததாக கூறப்படுகிறது. பொறுமைக்கு உதாரணமாக மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்களில் மூத்தவனான தர்மன் விளங்குகிறான். கௌரவர்கள் திரௌபதையை பஞ்ச பாண்டவர்களோடு சூதாடி ஜெயித்து அவளை மானபங்க படுத்தியபோது பீமன், அர்ச்சுனன்,

சகாதேவன், நகுலன் ஆகிய அனைவரும் சினங்கொண்டெழுந்த போது தர்மன் அவர்களை சாந்தப்படுத்தியதோடு மட்டுமன்றி பின்னர் வனவாசம் முடிந்து வந்து தங்களுடைய நாட்டை துரியோதனனிடம் கேட்டபோது அவன் தர மறுக்கவே அப்போது தர்மன் பொறுமையாக யுத்தத்தை மேற்கொள்ள விடாமல் தூதனுப்பி பேச்சு வார்த்தை நடத்தவே முடிவு செய்தான். எனவே தான் பொறுமைக்குச் சான்றாக தர்மனைக் குறிப்பிடுகின்றனர்.

பொறுமையைப் பற்றி இன்னும் விளக்கமாகக் கூறலாம். ஆதிகாலந்தொட்டு,

"பொறுத்தார் பூமியாழ்வார்"

என்ற ஒரு கருத்து இன்று வரை கூறப்பட்டு வருகிறது. இந்த கூற்றிற்கமைவாக பொறுமையாக இருந்தால் தாம் அடைய நினைக்கும் வெற்றியை என்றோ ஒரு நாள் அடைந்து விடலாம். ஆனால் பொறுமையை இழந்தால் எம்மால் சரியாக சிந்தித்து செயற்படவோ, சரியான முடிவுகளை எடுக்கவோ முடியாமல் போய் விடும். எனவே எமது இலக்கை அடைய முடியாது போகும். ஒரு பரீட்சையிலும் கூட அவ்வாறு தான். அச்சத்தோடு நம்பிக்கையின்றி பதற்றத்தோடு அந்த பரீட்சையை செய்தோமானால் எவ்வளவு படித்திருந்தாலும் எமது பெறுபேறு பாரியளவு மாற்றம் கண்டுவிடும். ஏன் ஒரு கொலையாளி கூட அவ்வாறு மாறுவதற்கு அவன் தனது பொறுமையை இழந்தமையே காரணமாகிறது. எனவே பொறுமை என்பது எமது தலையெழுத்தையே மாற்றி விடக்கூடிய வல்லமைக் கொண்டது என்பதை உணர்ந்து பொறுமையோடு எல்லாவற்றையும் செய்து வெற்றி காண வேண்டும்.

அடுத்ததாக நம்பிக்கையைப் பற்றிப் பார்ப்போம். ஒரு மனிதனின் மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கக் கூடியது அவன் தன்னை சூழ உள்ளவர்கள் மீது வைக்கின்ற நம்பிக்கையாகும். ஒரு குடும்பத்திலோ அல்லது அலுவலகத்திலோ ஒருவன் நம்பிக்கையின்றி வாழ்ந்தான் என்றால் அவனது வாழ்க்கையில் துளி கூட நிம்மதி இல்லை என்று அர்த்தம். ஒருவனுக்கு நிம்மதியே இல்லை என்றால் அவன் அனைவரையும் அனைத்தையும் சந்தேகப் படுகிறான் என்று பொருள். சந்தேகம் தலை விரித்து ஆடுகின்ற இடத்தில் ஒரு போதும் நிம்மதி இருக்காது. சந்தேகம் என்பது நம்பிக்கை இன்மையைக் குறிக்கும். இன்னும் விளக்கிக் கூறினால் சந்தேகம் என்பது ஒரு நோய் என கூறலாம். அதற்கு மருந்து நாமே நமது மனதை மாற்றிக் கொள்வது தான். இந்த சந்தேகத்தால் எவ்வளவோ பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

கணவன் மனைவிக்கிடையில் வருகின்ற பிரச்சினையை பார்த்தால் கணவனுக்கு மனைவி மீதோ அல்லது மனைவிக்கு கணவன் மீதோ சந்தேகம் ஏற்படலாம். அவ்வாறே அலுவலகத்தில் உரிமையாளருக்கு ஊழியர்கள் இடத்தில் ஏற்படலாம். அதே போன்று நண்பர்களுக்குள்ளேயும் ஏற்படலாம். இவ்வாறு ஏற்படுகின்ற சந்தேகத்தினால் மிகப் பாரிய விரிசல் ஏற்படக் கூடும். இவ்வாறு ஒருவர் மீது நாம் நம்பிக்கை வைக்காவிட்டால் எத்தனையோ சிக்கல்களை எதிர்நோக்கி இறுதியில் நாமே மன உழைச்சலுக்கு ஆளாகி விடுகிறோம். நம்பிக்கையோடு தொடர்புடைய இன்னுமொரு பிரச்சினை தான் நம்பிக்கை துரோகம்.

இது ஒருவர் மீது நாம் வைக்கின்ற அபார நம்பிக்கையால் நிகழக் கூடியது. நமது உறவினர்களிடமோ, நண்பர்களிடமோ அளவுக்கு அதிகமாக நம்பிக்கை வைத்து, அவர்களிடம் நாம் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களையும் கூறி, ஒழிவு மறைவின்றி எல்லா உண்மைகளையும் கூறி இருக்கும் போது நாம் நம்பிக்கை வைத்தவர்கள் எமக்கு உண்மையாக இல்லாமல் துரோகம் செய்தால், எம்மை பற்றி பொய்யாக எம் மீது நம்பிக்கை வைத்தவர்களிடத்தில் கூறி எமது பெயரை, எம் மீதுள்ள நல்லபிமானத்தை இல்லாமல் செய்தால் அதற்கு பெயர் தான் நம்பிக்கை துரோகம். எனவே எவ்வாறு நோக்கினாலும் நம்பிக்கை இல்லாமலும் இருக்கக் கூடாது. அதிக நம்பிக்கையோடும் இருக்கக் கூடாது என்பது தான் நிதர்சனம். ஆகவே நம்பிக்கை வைக்க வேண்டும். ஆனால் அதை அளவோடு வைக்க வேண்டும். இதுவும் ஒரு சர்க்கரை போன்றது தான்.

அதிகம் உண்டால் சர்க்கரை நோய் வரும். உண்ணாவிட்டால் சர்க்கரை இல்லாமையால் நோய் வரும். இதனை உணர்ந்து செயற்பட்டால் வாழ்வு சிறக்கும்.

இனி மேலும் சில உன்னத குணங்களைப் பற்றி ஆராய்வோம். மேற்கூறப்பட்ட நம்பிக்கை, பொறுமை, மன்னிப்பு போன்ற உயர் குணங்களைப் போன்றதே சகிப்புத்தன்மையும். இன்னும் சொல்லப் போனால் ஒருவனது நிம்மதியான வாழ்க்கைக்கும் அவன் தனது வாழ்வில் அடைய நினைக்கும் வெற்றிக்கும் சகிப்புத்தன்மை மிக அவசியமான ஒரு நற்குணமாகும். நாம் சிறு வயது முதல் எத்தனையோ போட்டிகளில் பங்குபற்றி இருப்போம். சிலவற்றில் வெற்றி அடைந்திருப்போம். சிலவற்றில் தோல்வி அடைந்திருப்போம். வெற்றியை எண்ணி மகிழ்ந்த அதேநேரம் தோல்வியை எண்ணி மனம் வருந்தி இருப்போம். அதே போன்றது தான் எமக்கு ஏற்படுகின்ற அவமானங்களும். எத்தனையோ இடங்களில் எவ்வளவோ அவமானங்களை சந்தித்திருப்போம். அவ்வாறு அவமானங்களைச் சந்தித்தவர்களில் பலர் தற்கொலைக்குக் கூட முயற்சித்திருப்பர். ஆனால் அது முட்டாள்தனமான முடிவு என்றே கருத வேண்டும். இவ்வாறான தோல்விகளையும் அவமானங்களையும் நாம் தாங்கிக் கொள்வதே சகிப்புத்தன்மை எனப்படுகிறது. நாம் என்றோ ஒரு நாள் அடையப் போகின்ற வெற்றிக்கு இன்று ஏற்படுகின்ற தோல்விகளும் அவமானங்களுமே அடித்தளமாக இருக்கும். இதனடிப்படையிலேயே,

"தோல்வி தான் வெற்றிக்கு முதல்படி"

என்ற கருத்து நிலவி வருகிறது. எனவே எம்மில் காணப்படக் கூடிய நற்குணங்களில் சகிப்புத்தன்மையும் ஒன்று என்பது உணர்ந்து செயற்பட வேண்டும்.

இது போன்றதே நன்றி மறவாமை. இதனை எதற்காகவும் நாம் கைவிடக் கூடாது என்னும் குணங்களில் ஒன்றாக குறிப்பிட வேண்டும். ஏனெனில் இந்த உலகில் ஒருவனால் எமக்கு ஏற்படுகின்ற துன்பத்தை அன்றே மறந்து விட வேண்டும். ஆனால் ஒருவரால் நமக்கு செய்யப்படுகின்ற உதவியை எமது உயிர் உள்ள வரை மறந்து விடக் கூடாது என ஒரு நியதியே காணப்படுகின்றது. இதற்கு உதாரணமாக தனது குருவாகிய துரோணாச்சாரியார் தட்சிணையாக கேட்டதற்காக தனது கட்டைப் பெருவிரலையே வெட்டிக் கொடுத்த ஏகலைவனைக் குறிப்பிடலாம். இதனை திருவள்ளுவர் செய்நன்றி மறவாமை எனும் அதிகாரத்தில்,

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று"

என்ற குறளில் கூறியுள்ளார். எனவே செய்நன்றி மறவாமை என்பது ஒருவனிடம் காணப்படக் கூடிய மிக உயரிய பண்பு என்பதை மனதில் கொண்டு நாமும் அக்குணத்தை எம்மிடையே பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இறுதியாக அன்பு. அன்பு என்பது ஒரு தாய் தன் குழந்தை மீது வைப்பதோ அல்லது எமது உறவினர்கள் மீது நாம் வைப்பதோ மட்டுமல்ல. இந்த உலகில் வாழ்கின்ற அனைத்து உயிர்களையும் மதித்து அவற்றின் மீது காட்டுவதே உண்மையான அன்பு. இவ்வாறான அன்பினால் இன்றும் நிலைத்திருப்பவர்களாக புறாவிற்காக தன்னையே பருந்திடம் கொடுத்த சிபி சக்கரவர்த்தி, மயிலுக்கு போர்வை கொடுத்த போகன், முல்லை கொடிக்கு தன் தேரையே கொடுத்த பாரி மன்னன் ஆகியவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் இன்று உயிரோடு இல்லாவிட்டாலும் அவர்கள் அன்று உயிர்கள் மீது காட்டிய அன்பினால் இன்றும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதன் மூலம் உயிர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டும். அவற்றிற்கு உதவி புரிய வேண்டும் என்பதை உணர்ந்து செயற்படுவோம்.

இங்கு குறிப்பிடப்பட்டவை மட்டுமன்றி இன்னும் எத்தனையோ நற்குணங்கள் உள்ளன. அவற்றை அறிந்து, அவற்றின் சிறப்பை அறிந்து அவற்றையும் கடைப்பிடிக்க வேண்டியது எமது கடமையென எண்ணி செயற்பட்டு வாழ்வில் வளம் பெறுவோம்.

"உலகில் பணத்தை விட குணமே உயர்வானது

பணம் இருக்கும் மனிதரிடம் குணம் இருப்பதில்லை

குணம் இருக்கும் மனிதரிடம் பணம் இருப்பதில்லை

ஆனால் இரண்டும் ஒன்று சேர்ந்து விட்டால்

ஒரு போதும் அழிவில்லை"

**Full name: Chithusshaa Pasubathy**

**Age group :16-29 (17)**

**E-mail :chithusshaa@gmail.com**

**National I.D No :200466402894**

**Today age :17.02.28**